*பிரசங்கம் 3*

# சபையைக் கட்டுதல்

## (1 கொரிந்தியர் 3:9-17; 9:19-22)

*இந்தப் பாடம் சபையைக் கட்டுவது எப்படி என்பதைப் பற்றியது. ஒரு சபைக் கட்டிடத்தை எப்படி கட்டுவது என்பதைக் குறித்து நாம் விவாதிக்கப் போவதில்லை - ஒரு சபைக் கட்டிடத்தை கட்டுவது என்று யாருக்காகிலும் சொல்லிக் கொடுக்கும் நபர்களில் உலகத்திலே மிகவும் கடைசி நிலையில் தகுதி பெற்ற நபர் நான்! இதற்கப்பால், சபைக்கான கட்டிடத்தை கட்டுவது எப்படி என்று புதிய ஏற்பாடு ஒன்றும் சொல்லுவதில்லை, ஆதலால் பின்வரும் பாடத்தை எந்தக் கட்டுபாட்டிற்கும் உள்ளாகாமல் மகிழ்வுடன் முன் வைக்கிறேன்.*

*மாறாக, "சபை" எனும் சொல் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப் பட்டிருக்கிறபடி, சபையை எப்படி கட்டுவது என விவாதிப்போம். வசனங்களிலே, "சபை" எனும் வார்த்தை எப்பொழுதும் ஜனக் கூட்டத்தையே சுட்டிக் காட்டுகிறது, ஒரு தடவை கூட இடத்தைச் சுட்டிக் காட்டவில்லை. கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்கள் தான் (சபை) என்று பொருள் (எபேசியர் 5:25).*

*நமது வாசகப் பகுதி 1 கொரிந்தியர் 3:9-17, இந்த வசனப்பகுதி சபையைக் கட்டுவதைக் குறித்துப் பேசுகிறது.*

*பவுல் தன்னையும் அப்பொல்லோவையும் - மற்றும் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கிற, போதிக்கிற அனைவரையும் - கட்டுமானப் பணியாளர்களாக விவரித்துப் பேசுகிறார். பிரசங்கியார்கள் சபையாகிய தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறார்கள்.*

*நாம் பவுலின் முன்மாதிரியைப் பின்பற்றி சபையைக் கட்டுவோமாகில், அதை எப்படி நடைமுறைப் படுத்துவது? சரீரப் பிரகாரமான ஒரு கட்டிடத்தை மனதில் கொண்டு, ஒரு கட்டிடத்தைக் கட்ட என்னவெல்லாம் உட்படுத்தப் படுகிறது என்பதை பரிசீலிக்க வேண்டும்.*

### பலமான ஒரு அஸ்திபாரம்

*முதலாவதாக, பலமான ஒரு கட்டிடத்திற்கு, வலிமையான அஸ்திபாரம் தேவை. அஸ்திபாரத்துக்கு என்னவெல்லாம் பயன்படுத்தப்பட வேண்டும்? பவுல், "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவேயல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" என்றார் (1 கொரிந்தியர் 3:11; எபேசியர் 2:20 யும் காண்க). இதைக் காட்டிலும் ஒரு பலமான அஸ்திபாரத்தை நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது: இயேசு கிறிஸ்து! சபை கிறிஸ்துவின்மேல் கட்டப்பட வேண்டும் (காண்க மத்தேயு 16:13-19)! இயேசு கிறிஸ்துவாகிய அஸ்திபாரத்தைப் போட, பின்வரும் படிகளை பவுல் பின்பற்றினார்.*

1. *இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே பிரசங்கம் பண்ணினார்* (1 கொரிந்தியர் 2:2). சபை மனித ஞானத்தின் மேல் கட்டப்படாமல், அனைத்து நித்தியத்துக்கும் திட்டமிடப்பட்டு கிறிஸ்து மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட தேவ ஞானத்தின் மேலேயே கட்டப்பட்டது. சபையானது அவருடைய வருகை, அவரது ஜீவிய வரலாறு, அவரது மரணம், அவரது உயிர்த்தெழுதல், அவருடைய கிருபையின் இரட்சிப்பு ஆகியவற்றின்மேல் கட்டப்பட்டது.

2. *கிறிஸ்துவின் செய்தியைப் பிரசங்கித்தார்.* புதிய ஏற்பாட்டுச் செய்தி கிறிஸ்துவினிடத்திலிருந்து வந்தது. முறையான அஸ்திபாரம் போட, நாம் அந்த செய்தியைப் பிரசங்கிக்க வேண்டும். கட்டிடத்தின் இசைவமைப்பை தொடர, ஒரு வரைபடத்திட்டம் - தேவை. புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவின் வசனமே சபையைக் கட்டத் தேவையான வரை படமாக கண்டு பிடிக்கிறோம்.

3. *அவர் கிறிஸ்துவின் சபையைப் பற்றிப் போதித்தார்.* கிறிஸ்துவே சபையில் அன்புகூர்ந்து, அதற்காக மரித்து, சபையை இரட்சித்துக் காப்பதால், ஒருவர் கிறிஸ்துவை உயர்த்தி அவரது சபையை கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. சரியான முறையில் அஸ்திபாரமிட்டு சபையைக் கட்ட, புதிய ஏற்பாடு அவருடைய சபையைக் குறித்துப் போதிப்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" என்று பவுல் சொல்லும் போது (ஒருவராலும் முடியாது) (3:11), என்று உறுதியிட்டுச் சொல்லவில்லை. ஜனங்கள், வேறே அஸ்திபாரத்தின் மேலும் கட்டக்கூடும் என்பது உண்மையே. சில சபைகள் மனிதனுடைய உபதேசக் கோட்பாடுகள் மேல் கட்டப் பட்டன, சில தனிப்பட்ட சில பெரிய மனிதர்கள்மேல், சில புகழ்பெற்ற ஒரு குறிப்பிடப்பட்ட பிரசங்கியார் மேல் கட்டப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும், பவுல் சொல்லுவது என்னவெனில், *கிறிஸ்துவல்லாது வேறே எந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டினாலும் தேவனைப் பிரியப் படுத்தாது.* தேவனுக்கு முழுமையாய் கீழ்ப்படியத் தவறுபவர்களைப் பார்த்து, முடிவில் "என்னை விட்டு அகன்று போங்கள்" என்று சொல்லுவார் (மத்தேயு 7:23).

## ஒரு திறமை மிகு சிற்பி

*இரண்டாவதாக, ஒரு கட்டிட நிர்மாணத் திட்டம் வெற்றிகரமாய் அமைய ஒரு திறமை மிக்க சிற்பி தேவை.* ஒருவர் ஒரு கட்டிடத்தைக் கட்ட அனுபவமிக்க தச்சர்களையும், மின் இணைப்பு பணியாளர்களையும், நீரேற்று குழாய் அமைப்பாளர்களையும் பணிக்கு அமர்த்துவார். சபையை பொறுத்த மட்டும் பவுல் ஒரு அனுபவமிக்க கட்டிட நிபுணர். அவர், "எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல (திறமை சாலியைப் போல) அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான்" (1 கொரிந்தியர் 3:10அ) என்று எழுதினார். சபையைக் கட்டுவதில் பவுல் முன்மாதிரியாகப் பணி செய்தார். நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயும் திறமையாகவும் கட்ட வேண்டும்.

**நாம் ஏன் திறமையாகக் கட்ட முயல வேண்டும்?**

கர்த்தருக்கென்று நாம் எதைச் செய்கிறோம் *எப்படிச்* செய்கிறோம் என்பதெல்லாம் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை, நாம் "வசனத்தைப் பிரசங்கித்தால்" தேவன் விளையச் செய்வார் என்று அநேகர் நம்புகின்றனர் (1 கொரிந்தியர் 3:5-7; 1 தீமோத்தேயு 4:2 ஐக் காண்க). தேவன் விளையச் செய்கிறார் என்பது உண்மைதான். அதே போல், பெலன் சுவிசேஷத்திலும் (ரோமர் 1:16) சிலுவைப் பற்றிய செய்தியிலும் இருக்கிறது (1 கொரிந்தியர் 1:18), மனிதனிலோ மனிதனுடைய வல்லமையிலோ சாதுரிய ஞானத்திலோ அல்ல. எப்படியாயினும், பவுலும் (மற்ற திருமறை எழுத்தாளர்களும்) கிறிஸ்தவர்கள் சபையை எப்படி கட்டுகிறார்கள், சபை ஊழியத்தை எப்படி செய்கிறார்கள் என்பது வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று அறிந்திருந்தார்கள்.

- இங்கு 3:10ல் தான் புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல் கட்டினதையும், நாம் எப்படி ஜாக்கிரதையாக கட்ட வேண்டும் என்று அவர் நமக்கு சொன்னார்.
- கொலோசெயர் 4:6ல், பவுல், "அவனவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயும் இருப்பதாக" என்று கூறினார். மறுபடியும், சுவிசேஷத்தை எப்படி பிரசங்கிக்கிறோம் என்பது முக்கியமானது.
- 2 தீமோத்தேயு 2:24-26, ன்படி நமக்கு எதிராய்ப் பேசுகிறவர்களிடம் "சாந்தமாய்" உபதேசிக்க வேண்டும்.
- 1 பேதுரு 3:15ல் நம்மில் ... "இருக்கிற நம்பிக்கையைக்குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டும்," என்று நாம் வாசிக்கிறோம்.
- எபேசியர் 4:15 "அன்பினாலே" சத்தியத்தை நாம் பேசவேண்டும் என்று சொல்லுகிறது.
- பவுல் தான் பிரசங்கித்த எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக பிரசங்கிக்கவில்லை. அத்தேனே பட்டணத்தில் அவருடைய பிரசங்க அணுகுமுறை (நடபடிகள் 17), பிசிதியாவிலுள்ள அந்தியோகியாவில் இருந்த ஜெப ஆலயத்தில் அவருடைய பிரசங்க அணுகுமுறையிலிருந்து வித்தியாசப் பட்டிருந்தது (நடபடிகள் 13).

இந்த இரண்டு கருத்துக்களையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்: தேவன் விளையச் செய்கிறார், பெலன் சுவிசேஷத்தில் இருக்கிறது. அதே வேளையில் வசனத்தை பரப்புகிற விஷயத்தில் உசிதமான முறைகளை பயன்படுத்துவதை தேவன் எதிர்பார்க்கிறார்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தவும், சபையை கட்டியெழுப்பவும் இது தேவை.

**திறமையாக நாம் கட்டுவது எப்படி?**

திறமையாகக் கட்டுவது எப்படி என்று நமது வாசக வசனப் பகுதியில் பவுல் விவரமாகக் குறிப்பிடவில்லை. பின்னர், 1 கொரிந்தியர் 9:9-22ல், சபையை

ஊக்கமாக கட்ட ஏதுவான போதனையைக் கொடுக்கிறார்.

பவுலின் முறைகள் அவரது கூற்றான "எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" என்பதிலிருந்து சுருக்கமாய் அறிந்துகொள்ளப்பட முடியும்.

1. "நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (9:22ஆ). பவுல் தனிப்பட்ட ரீதியில் தொடர்பு கொள்ளும் முறையை பேசுகிறார். கிரேக்கர்களையும் யூதர்களையும் திருப்திபடுத்த சுவிசேஷ சத்தியத்துடன் ஒத்துப் போகக் கூடியவராயிராமல், அவர்களுடைய பாவங்களில் இனணந்து போகக் கூடியவராய் இருக்கவில்லை. சுவிசேஷ கொள்கைகள் என்று வந்தபோது, யார் எதிர் பேசினாலும் கவலைப்படாமல் சத்தியத்திற்காக உறுதியாக நின்றார். பேதுருவின் உறுதியற்ற தன்மைக்காகவும் கிறிஸ்தவ தன்மையற்ற செயலுக்காகவும் அவரைக்கூட அவர் கடிந்து கொண்டார் (கலாத்தியர் 2:11-14). புறஜாதிகள் இரட்சிக்கப்பட விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்று சொன்னவர்களை எதிர்த்தார் (நடபடிகள் 15:1, 2; கலாத்தியர் 2:1-5யும் காண்க), கலாத்தியர்கள் சுவிசேஷ சத்தியத்தை விட்டு "வேறொரு சுவிசேஷத்துக்குத்" திரும்பினபடியால் அவர் அவர்களை கண்டனம் பண்ணினார் (கலாத்தியர் 1:6-9). இருந்தபோதிலும், பொதுவுடமை வாழ்வைக் கொண்டிருந்த மக்களைச் சந்தித்தபோது, அவர்கள் புரிந்துகொள்ளத்தக்கதாக சத்தியத்தை முன்வைத்தார்.

அவர், ''யூதருக்கு யூதனைப்போலவும்'' (9:20அ) ''நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன்" (9:20ஆ) என்று சொன்னார். பவுல் தன்னுடைய யூத வம்சாவழியை ஒருபோதும் மறுக்கவில்லை, ஆனால் அடிக்கடி யூதர்களிடத்தில் பேசும்போது மட்டுமே அது குறித்து பேசினார் (நடபடிகள் 22:3; 26:4; 28:17).[1] ஒரு பட்டணத்தில் பிரசங்கிக்கப் போகும் போதெல்லாம் இயன்றவரை ஒரு யூதக் கூட்டத்தை[2] ஜெப ஆலயங்களில் வரச் செய்து அங்கே பிரசங்கித்தார். அப்படிச் செய்ய ஏதுவாக இருக்குமானால், யூத முறைமைகளையும் சில நேரங்களில் அனுசரித்தார்.[3]

அவர், ''நியாயப்பிரமாணம் இல்லாதவனுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவும் (9:21அ) ஆனேன்" என்றும் சொன்னார். பவுல் குறிப்பாக புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக நியமிக்கப்பட்டவர் (நடபடிகள் 9:15, 16; 22:21; 26:17, 18; கலாத்தியர் 1:16; 2:1-10). அவர்களிடத்தில் அவர் பிரசங்கித்தபோது, தங்களுடைய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கவகையில் பேசினார். லிக்கவோனியாவிலிருந்த ஜனங்கள் பவுலையும் பர்னபாவையும் தொழுதுகொள்ள முயன்றபோது, பவுல் வீணான தேவர்களை விட்டு விலகும்படியாகவும் ஜீவனுள்ள தேவனையே தொழுதுகொள்ளும்படியாகவும் பவுல் பிரசங்கித்தார் (நடபடிகள் 14:14-18). கூடிவந்திருந்த ஜனங்கள் அதைப் புரிந்துகொள்ள முடிந்தது. பவுல் புறஜாதிகளுடன் நட்புறவாய்ச் செல்லவே விரும்பினார், இதை அவருடைய சொந்த ஜனங்களில் அநேகர் விரும்பவில்லை. உதாரணமாக, பிலிப்பிய சிறைக் காவலனுடைய வீட்டில் அவர் போஜனம் புசித்தார் (நடபடிகள் 16:34). அவர் யூதருடைய ஜெப ஆலயங்களில் மட்டும் பிரசங்கியாமல் புறஜாதிகள் குழுமியிருக்கும் இடங்களான சந்தை வெளிகளிலும், மேடைப் பகுதிகளிலும் ("மார்ஸ் மேடை"), வித்தியா சாலைகளிலும் அவர்களுடைய வீடுகளிலும் -

புறஜாதியாரைக்கண்ட இடங்களிலெல்லாம் போதித்தார் (நடபடிகள் 17:17, 22; 18:7, 8).

தன் செய்தி கேட்கும் கூட்டம் யூதராயினும் புற ஜாதியாராயினும், பவுல் தனது செய்தியின் மையக் கருத்தை பவுல் மாற்றிக் கொள்ளவில்லை. அதே வேளையில், குறிப்பிட்ட கூட்டத்துக்கு ஏற்ப பேசுவதில் தனது அணுகு முறையைக் கொண்டிருந்தார்.

2. "எல்லாருக்கும் எல்லாமானேன் ..." (9:22இ). தனது சுவிசேஷ ஊழியத்தில் பவுல் கையாண்ட இரண்டாவது முறை "எல்லாருக்கும் எல்லாமானேன்" என்பது. தன்னால் இயன்றவரைக்கும் எல்லா வழிகளிலும் எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கவும் போதிக்கவும் செய்தார், அப்பொழுதெல்லாம் தன்னால் இயன்றவரை கேட்டவர்களுக்கு தனது போதனை முறையை கையாண்டார். அவர் நிருபங்களை எழுதியும், ''வெளியரங்கமாக வீடுகள்தோறும்'' பிரசங்கித்தார் (நடபடிகள் 20:20). சந்தை வெளிகளிலும், வித்தியாசாலை (பள்ளிக்கூடங்)களிலும், ஜெப ஆலயங்களிலும் பெரிய கூட்ட ஜனங்களுக்கு பிரசங்கித்திருக்கிறார்; தனிப்பட்ட முறையில் வீடுகளிலேயும் போதித்திருக்கிறார். அவர் உபத்திரவப்படுத்தப்பட்ட நேரங்களில் கூட சுவிசேஷத்தை பிரசங்கிக்க கிடைத்த வாய்ப்பை அனுகூலமாக்கிக் கொண்டார் (நடபடிகள் 16:22-33; 26:27; பிலிப்பியர் 1:12, 13).

3. ''சிலரை இரட்சிக்கும்படிக்கு'' (9:22இ). தனது ஊழியத்தில் பவுல் கையாண்ட மூன்றாவது முறை அவர் செய்த எல்லாமே எப்படியாகிலும் "சிலரை இரட்சிக்கும்படிக்குச்" செய்தார். கிறிஸ்தவர்கள் கர்த்தருக்கென்று ஊழியம் செய்கிறபடியால், அவர்களின் குறிக்கோள் அனைத்தும் ஆத்துமாக்களை இரட்சிப்பதாகவே இருக்க வேண்டும்! பவுலைப்போல - நாமும் - ''எல்லாரும்'' இரட்சிக்கப் பட வேண்டும் என்று நாம் விரும்பினாலும், ''சிலர்'' மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்பதை நாம் உணர வேண்டும். பவுலின் வாக்கியங்கள் ஆர்வமளிக்கின்றன: அவர் *"எல்லாருக்கும்'' "எல்லாமாகி'' "எப்படியாகிலும்'' "சிலரை''* இரட்சிப்புக்கு உள்ளாக்க வேண்டும் என்று விரும்பினார். எல்லாரும் இரட்சிக்கப்படுவதை பவுல் விரும்பினாலும், *சிலர்* மாத்திரமே தனது பிரசங்க செய்திக்கு உறுதியளிக்கும் வகையில் கீழ்ப்படிவார்கள் என்பதை அறிந்திருந்தார். அநேகர் செய்தியை ஏற்றுக் கொண்டிருந்தாலும் (நடபடிகள் 18:8 ஐக் காண்க), அநேகர் அதைப் புறக்கணிக்கவும் செய்தனர். இருந்தபோதிலும், தேவன் தனக்குச் செய்யும்படி கொடுத்த பணியை உண்மையோடு பிரசங்கம் பண்ணி நிறைவேற்றா விட்டால் அந்த "சிலரும்'' கூட இரட்சிக்கப் படமாட்டார்கள் என்பதை பவுல் அறிந்திருந்தார்.

நாம் பவுலின் மாதிரியை பின்பற்றுகிறோமா? தேவையை நாம் காண வேண்டும், நமது கடமையை உணர வேண்டும் - பவுலைப் போல - ஜனங்கள் இரட்சிக்கப்பட ஏதுவாக சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியது நமது பணியாக இருக்கிறது.

இந்த கடமையை நாம் வினயமாக எடுத்துக் கொள்வோமாகில், "இழந்துபோன ஆத்துமாக்களை இரட்சிக்கும்படிக்கு நான் எப்படி சிறப்பான பணியைச் செய்ய முடியும்?" "என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்." சமுதாயத்தில் உள்ள எல்லாருமே சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்,

ஆனால் சிலர் ஏற்றுக் கொள்வர். இருக்கிறவர்களை (இரட்சிப்பு) அடையும்படி நம்மால் ஆன எல்லாவற்றையும் செய்திருக்கிறோமா? இரட்சிக்கப்பட விரும்பும் மேலும் பல மக்களை அணுகி இன்னும் நாம் கையாளாத முறைகளைப் பயன்படுத்தியிருக்கிறோமா? ஒரு உள்ளூர் சபை ஞாயிற்றுக்கிழமை மட்டுமின்றி வாரத்தின் இடைபட்ட நாட்களிலும் சிறுவர்களுக்கு வேதவகுப்பு நடத்த வேண்டும். கிறிஸ்தவர்கள் வானொலி அல்லது தொலைக்காட்சி ஊழியத் திட்டத்தையும், சிறப்பு நிகழ்ச்சிகளையும் - "நண்பர்கள் தினம்," வேனிற் கால வேத வகுப்பு, அல்லது சுவிசேஷ பிரசங்க முகாம்கள் ஆகியவற்றை உள்ளூர் சபைக்கெனத் திட்டமிடலாம்.

## சரியான பொருட்கள்

*மூன்றாவதாக, பலமான கட்டிடத்தைக் கட்ட நாம் இயன்ற வரை சிறப்பான பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.* தரம் தாழ்ந்த பொருட்களைப் பயன்படுத்தி ஒரு கட்டிடச் சிற்பி கட்டுவாரானால், தனது கட்டிடம் வெகு நாட்கள் நிலைத்திருக்குமென்று எதிர்பார்க்க இயலாது. சபையும் நல்ல பொருட்களைக் கொண்டு கட்டப்பட வேண்டும். சபையாகிய தேவனுடைய ஆலயம் கட்டப்படுகிற கட்டிடப் பொருட்களைப் பற்றி பவுல் பேசினார் (3:12-15).

பவுல் இரண்டு வகையான வித்தியாசப்பட்ட கட்டிடப் பொருட்களைப் பற்றி எழுதுகிறார் - விலையேறப்பெற்ற பொருட்கள் (பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள்) சாதாரணப் பொருட்கள் (மரம், புல், வைக்கோல்). பலவகையான பொருட்களாகிய இவைகள் வித்தியாசப்பட்ட வகையான கிறிஸ்தவர்கள், அவைகளை பரிசோதிக்கும் அக்கினி என்பது அக்கினி பரீட்சைகளும், உபத்திரவங்களுமாம். சோதனைகள் வரும்போது அல்லது உபத்திரவங்கள் எழும்பும்போது, சில கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருப்பார்கள். விலையேறப்பட்ட பொருட்களாக இவர்கள் காணப் படுகின்றனர்; அதே சூழ்நிலையில் மற்றவர்கள் விழுந்துபோவார்கள். இவர்கள் சாதாரணப் பொருட்களை அடையாளப்படுத்துகிறார்கள்; அவர்கள் அக்கினியால் "சுட்டெரிக்கப் படுவார்கள்." இப்படி நடந்தாலும் கூட, பிரசங்கியாரோ போதகரோ தனது பிரதிபலனை இழக்கமாட்டார்கள்; போதிப்பவரின் இரட்சிப்பு கற்றுக்கொள்ளும் மாணவரின் தொடர் விசுவாசத்தில் இல்லை.

பவுல் இங்கே சிறப்பான பொருட்களாகப் பார்த்து கட்டிடத்துக்கு தெரிந்தெடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நாம் எல்லா வகையான ஜனங்களையும் மனமாற்ற முயல வேண்டும். விதைக்கிறவனைப் பற்றிய உவமையில் இயேசு போதித்தவைகளுக்கு ஒப்பாகத்தான் பவுல் போதித்தார். வளமான இடத்தில் மட்டுமே நாம் விதைக்க வேண்டும் என்று இயேசு சொல்லவில்லை; மாறாக, நாம் விதைகளை விதைக்கிறபோது, எல்லா இடங்களிலும் விதைக்கிறோம், நம்மிடத்தில் கேட்கிறவர்கள் வித்தியாசமாய் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். சிலர் மற்றவர்களைக் காட்டிலும் விசுவாசத்தில் தரித்திருப்பார்கள், ஆகிலும் போதிக்கும் சந்தர்ப்பம் நமக்கு இருக்கும் போதே, யாரையும் புறக்கணிக்காமல், எல்லாரையும் அணுகி போதிக்க வேண்டும். நாம் அகன்ற பரந்த நிலங்களிலே விதைகளை விதைக்க வேண்டும்,

நாம் விசுவாசத்தோடு தொடர்ந்து விதைப்போமாகில், சில நல்ல நேர்மையான இருதயங்கள் அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடும்.

## பிரதி பலனுக்கான ஒரு எதிர்பார்ப்பு

கட்டிடத் திட்டம் நிறைவேறினவுடனே, கட்டிடச் சிற்பி தனக்கான பிரதிபலனை (கூலியை) எதிர்பார்ப்பார். ஒரு வீட்டை கட்டும்படியாக அவர் அமர்த்தப்படுவாரானால், தனது வேலைக்கான சம்பளத்தைப் பெறுவார். அவர் தனக்கென ஒரு கட்டிடத்தைக் கட்டுவாராகில், தனது திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதற்கான திருப்தி அவருக்கு இருக்கும். அதே போல, சபையைக் கட்டும்படி நாம் ஊழியப் பணி செய்தால், நாம் பிரதிபலனை எதிர்பார்க்கலாம். பவுல்,

> அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான், அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியில் அகப்பட்டு தப்பினதுபோலிருக்கும் என்று சொன்னார் (3:14, 15).

எப்படிப்பட்ட பிரதிபலனை நாம் எதிர்பார்க்கலாம்? சபை ஆவிக்குரிய வகையிலும் எண்ணிக்கையிலும் வளரும்படி எதிர்பார்க்கலாம். பவுலின் மற்றொரு உருவகச் சொல்லை இந்த அதிகாரத்திலிருந்து பயன்படுத்த வேண்டுமானால் விதைகளை நாம் விதைத்த பின் நாம் அறுவடையை எதிர் பார்க்கக் கூடும். நாம் பெறுகிற மற்றொரு பிரதிபலன் - இதுதான் பவுலின் மனதிலும் இருந்திருக்க வேண்டும் - பரலோகத்தில் இருக்கிறது. நமது ஊழியப் பணியினால் பூமியிலே நமக்கு எந்தவிதத்திலும் ஒன்றுமில்லாமல் போனாலும், (நம்மால் மனமாற்றப்பட்டோர் விழுந்து போனாலோ, நாம் ஊழியம் செய்த சபை உதிர்ந்து அல்லது முற்றிலும் அழிந்து போனாலும்), பரலோகத்தில் நமக்காக வைக்கப்பட்ட பலனை நாம் இழந்து போகமாட்டோம்.[4]

## முடிவுரை

இவை எல்லாவற்றோடும் கூட, அடுத்த வருவது என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டும்: “நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார், தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது”; நீங்களே அந்த ஆலயம் (3:16, 17). “தேவனுடைய ஆலயத்தைக்” கெடுப்பது என்பது சபையைக் கெடுப்பதாகும். நாம் அநேகமாக இன்னொரு பாடத்தில் தேவனுடைய சபையை உருக்குலைந்து போகப்பண்ணுவது, அல்லது சபையை விழத்தள்ளுவது என்பதை படிப்போம். எப்படியிருப்பினும் நம்முடைய சகோதரர்களில் அநேகருக்கு இப்படிப்பட்ட தலைப்பில் ஒரு பாடம் தேவைப்படாது; அது எப்படி என்று அவர்களுக்கு ஏற்கனவே தெரியும். நாம் இந்தக் கட்டிடம் கட்டும் பணியில் இருக்கிறோமா என்று நிச்சயப் படுத்திக் கொள்வது அவசியம், உருக்குலைத்துப் போடும் காரியத்தில் அல்ல. ஒரு உள்ளூர் சபையை யார் வேண்டுமானாலும் கெடுக்கலாம், ஆனால் ஒரு சபையை

*கட்டியெழுப்ப ஒரு புத்தியுள்ள சிற்பாசாரி தேவை. அப்பபடிப்பட்ட கட்டிட பணியாளர்களாக நாம் இருப்போம்!*

---

*குறிப்புகள்*

*[1]பவுலின் யூத வம்ச வரலாறு குறித்து, பிலிப்பியர் 3:1-7; ரோமர் 9:1-5லிம் காண்க. [2]ரோமர் 1:16, 17ஐ ஒப்பிட்டு, சுவிசேஷம் "முன்பு யூதரிலும்" இரட்சிக்கப்படுவதற்கு தேவ பெலனாயிருக்கிறது என பவுல் சொல்லுவதைக் காண்கிறோம். [3]பவுல் எருசலேமில் இருக்கையில், தன்னோடு கூட இருந்த நான்கு யூத கிறிஸ்தவர்களைச் சேர்த்துக் கொண்டு செய்த பொருத்தனைக்கு இந்த விளக்கம் கொடுக்கப்பட்டதுபோல் காணுகிறது (நடபடிகள் 21:24), பின்பு - அவர்களோடு "சுத்திகரிப்புச் செய்துகொண்டு" - "தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவும் சுத்திகரிப்பின் நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்" (நடபடிகள் 21:26; நடபடிகள் 18:18-யும் காண்க). [4]இது சம்பவிக்குமானால் நாம் "நஷ்டமடைவோம்," யார் நம்மால் மனமாற்றப்பட்டார்களோ அவர்கள் உலகத்துக்கே திரும்புவார்களேயாகில் நாம் துக்கமடைவோம்.*